காப்பாற்ற கூட்டுறவு முறையில் அவர்கள் தொழில் செய்கின்ற முறையை அமுல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இப்போதே அரசாங்கம் அவர்கள் தொழில் நடத்துவதற்கு வட்டியில்லாக்கடன் வழங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் நான் தண்ணீர் எடுப்பதில் பிரச்னை இல்லை என்று சொன்னதாக குறிப்பிட்டார்கள். நான் சொன்னது அந்தச் சமூகத்திற்குள்ளே; அவர்கள் சொல்வது தாழ்த்தப்பட்டவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இருக்கும் பிரச்னை.

மணிமுத்தா ஆற்றின் குறுக்கே பாலம்

* வினா எண் 92— திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், கூத்தக்குடி—நின்னியூர் சாலையின் குறுக்கே அமைந்துள்ள மணிமுத்தா ஆற்றில் பாலம் கட்ட ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. மொ. பெரியசாமி : தலைவரவர்களே, தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், கூத்தக்குடி—நின்னியூர் சாலையின் குறுக்கே அமைந்துள்ள மணிமுத்தா ஆற்றில் பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற இடத்தில் பாலம் கட்ட ரூ. 4.50 லட்சம் செலவில் 1979–80-க்கான இரண்டாம் பாகம் திட்டத்தில் செயல்படுத்த அரசு பரிசீலனையில் உள்ளது.

பாபனாசம் சாலை—தாம்பரபரணி பாலம் சாலை

*வினா எண் 93—திரு. சு. முத்துசாமி கரையாளர் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—